# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 13 /பேரூ/2026**
**நாள் : 06.07.2026**

சு. பிரகாஷ்,
வேடபட்டி,
கோயம்புத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வேடபட்டி முதல்நிலை பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், வேடபட்டி, ஸ்ரீராம் கார்டன் பகுதி 1, 3/H9, பவானி வீதி என்ற முகவரியில் வசிக்கும் திரு. சு. பிரகாஷ் என்பவரது 14.01.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.01.2026 அன்று பெறப்பட்டு, 13/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

கோயம்புத்தூர் மாவட்டம், வேடபட்டி, ஸ்ரீராம் கார்டன் பகுதி 1, 3/H9, பவானி வீதி என்ற முகவரியில் வசிக்கும் திரு. சு. பிரகாஷ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 14.01.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டத்தில் உள்ள வேடபட்டி பேரூராட்சியில் 01.04.2023 ஆண்டு முதல் 31.03.2025ஆம் ஆண்டு வரை எண்ணிலடங்காத ஊழல் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் 2 (j) கள ஆய்வின் மூலமாக நான் கண்டது 1) அலுவலக எழுது பொருள் வாங்கியது முதல் பவானி சிறுவாணி குழாய்கள் பழுதுபார்ப்பு பராமரிப்பு என்ற பெயரில பலமுறை முறைகேடுகளில் செயல் அலுவலர் ஈடுபட்டுள்ளார். மறு தணிக்கை ஆய்வு செய்ய வேண்டுகிறேன்.

1. கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள வேடபட்டி பேரூராட்சியில் 01.04.2023 ஆண்டு முதல் 31.03.2025 ஆண்டு வரை (மறு தணிக்கை செய்ய வேண்டும்) பணியாற்றிய வேடபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி விஜயபானு அவர்கள் வேடபட்டி பேரூராட்சியில் கணக்கில் அடங்காத முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளார். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலமாக கள ஆய்வு செய்தபோது அதிர்ச்சி அளிக்கக்

கூடிய வகையில் அவரின் தலைமையின் கீழ் 1) அலுவலகத்திற்கு எழுது பொருட்கள் வாங்கியது முதல் (தேதி 12.04.2024 1) காசோலை எண். 838548 தொகை ரூ.9800/-
2) 15.04.2024 காசோலை எண்.838551 தொகை 9500/- 2) பவானி சிறுவாணி குடிநீர் குழாய் பழுது பார்த்தல். 1) 10.04.2024 காசோலை எண். 838545 தொகை ரூ.48,310.

2) 12.04.2024 காசோலை எண். 838546 தொகை ரூ.44,910/- செய்யாத சாக்கடை கால்வாய் பணி செய்தது போல மற்றும் செய்த சாக்கடை கால்வாய் பணி தரமற்ற முறையிலும் அமைத்துள்ளார். ஆனால் ஆய்வு செய்யவில்லை.

3) பேரூராட்சி மன்ற கூட்டம் நடக்காததை நடந்தது போல வராத உறுப்பினர்களை வந்தது போல போலி நபர்கள் மூலம் கையெழுத்து பெற்று கூட்டம் நடைபெற்றதற்கு என்று செலவு செய்தது போல கவுன்சிலரின் இல்லங்களுக்கு சென்று கையெழுத்து பெறுவது கூட்டத்தில் கலந்து கொள்ளாத வராத கவுன்சிலர்களிடம்.

4) வழக்கறிஞர்களுக்கு என்று பீஸ் கொடுத்ததாக பல வழக்குகளுக்காக என்று 05.04.2024 முதல் 20.04.2024 வரை இலட்சத்தை தொடும் அளவிற்கு குறிப்பேடுகளை கண்டேன். கள ஆய்வின் போது, பலவகைகளில் ஊழல் செய்து பலன் அடைந்துள்ளார். பராமரிப்பு செய்யாத பணிக்கு போலியான பில்களை உருவாக்கி இவ்வாறு பல வகைகளில் மேற்கூறிய செயல் அலுவலர் அவர்கள் முறைகேடு செய்துள்ளார்.

5) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் அவரது சொத்து விவரங்களை பற்றி தகவல்களை கோரினால் 8(1) ஜே யின் அடிப்படையில் தகவல்கள் மறுக்கப்படுகிறது. இதிலிருந்து வேடபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் தில்லுமுல்லுகள் வெளிப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் பொய்யான தகவல்களை வழங்குகிறார். பொய்யாகக் கணக்குகளை சமர்ப்பித்து ஊழல் முறைகேடுகளில் திளைத்துள்ளார்.

6) வருமானத்திற்கு அதிகமாக (சொத்துக்களை வாங்கி குவித்துள்ளார். அவரின் வாரிசுதாரர்களின் பெயரில் உட்பட) சொத்துக்களை குவித்துள்ளார்.

7) வேடபட்டி பேரூராட்சியில் உள்ள எப்.சி. காலனி பகுதியில் உருவாக்கப்பட்ட மேல்நிலை குடிநீர் தொட்டி தரம் இல்லாமலும் அதிக அளவு முறைகேடும் செய்துள்ளார். இந்த தொட்டியானது அமைக்கப்பட்டு இன்றுடன் மூன்று ஆண்டுகள் நெருங்கப் போகிறது. ஆனால் தண்ணீர் ஏற்றினால் நீர்க்கசிவு ஏற்படுகிறது. பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இன்னும் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை.

8) கட்டிட வரைமுறைக்கும் லே அவுட் அமைப்பதற்கு / அமைத்ததற்கு டிடிசிபி விதிகளின் முறையை மதிக்காமல் ஆய்வு செய்யாமல் பூங்காக்கு என்ற இடம் ஒதுக்காமல் ரிசர்வு சைட் ஏற்படுத்தாமல் தனது சுயலாபத்திற்காக பணத்தின் பலனை பெற்று அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார்.

9) தமிழக அரசு அறிவித்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை பெயரளவுக்கு வைத்துக்கொண்டு தூய்மை பணியாளர்கள் குப்பைகளை ஆங்காங்கே குவியல்களாக குவித்து நெருப்பு மூட்டி விடுகிறார்கள். குப்பைகளை தரம் பிரிக்காமல் பிளாஸ்டிக் பொருட்கள் அனைத்துமே எரிக்கின்றார்கள். திடக்கழிவு மேலாண்மை திட்டம் என்ற ஒன்று செயல்படாமல் செய்துவிட்டார்.

10) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வேடபட்டி பேரூராட்சி சம்பந்தமான தகவல்களை கேட்டால் ஆர்டிஐ சட்ட விதி 4(1) பி அடிப்படையில் வழங்காமல் 8(1) ஜெ அடிப்படையில் தகவல்களை வழங்காமல் மறுத்தார். வேடபட்டி பேரூராட்சியில் ராணுவ ரகசியங்களையும் அணுகுண்டு தயாரிக்கும் முறைகளையோ இந்திய இறையாண்மைக்கு எதிரான தகவல்களையோ நான் கேட்கவில்லை. ஆனால் திருமதி. விஜய பானு செயல் அலுவலர் அவர்கள் RTI விதியை முற்றிலுமாக அவமதிக்கும் நோக்கத்துடனும் செயல்பட்டார். ஆகவே இந்த செயல் அலுவலரின் மீது தமிழ்நாடு அரசு பணியாளர்கள் ஒழுங்கு நடவடிக்கை விதிகளின்படி 17(பி)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.01.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேடபட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. வேடபட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 13.02.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 107/2025-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

மனுதாரரின் கோரிக்கை எண்.1

பொது தகவல் அலுவலர் கடிதத்தின்படி கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள வேடபட்டி பேரூராட்சியில் 01.04.2023 ஆண்டு முதல் 31.03.2025 ஆண்டு வரை (மறு தணிக்கை செய்ய வேண்டும்) பணியாற்றிய வேடபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி விஜயபானு அவர்கள் வேடபட்டி பேரூராட்சியில் கணக்கில் அடங்காத முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளார். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலமாக கள ஆய்வு செய்தபோது அதிர்ச்சி அளிக்கக் கூடிய வகையில் அவரின் தலைமையின் கீழ்

1) அலுவலகத்திற்கு எழுது பொருட்கள் வாங்கியது முதல் (தேதி 12.04.2024

காசோலை எண். 1) 838548 தொகை ரூ.9800/- 2) 15.04.2024 காசோலை எண்.838551 தொகை 9500/-

2) பவானி சிறுவாணி குடிநீர் குழாய் பழுது பார்த்தல்)

1) 10.04.2024 காசோலை எண். 838545 தொகை ரூ.48,310/- 12.04.2024 காசோலை எண். 838546 தொகை ரூ.44,910/-

பொது தகவல் அலுவலரால் வழங்கப்படும் பதிலறிக்கை

கோயம்புத்தூர் மாவட்டம், வேடபட்டி முதல்நிலை பேரூராட்சியில் மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள காலமான 01.04.2023 முதல் 18.08.2024 ஆண்டு வரை திருமதி. இரா. சுதா என்பவர் செயல் அலுவலராகவும், 19.08.2024 முதல் 31.03.2025 வரை திருமதி. இரா. விஜயபானு என்பவர் செயல் அலுவலராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

மேற்படி புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள செலவினங்களுக்கு அலுவலக உபயோகத்திற்கு அவசர அவசியம் கருதி எழுது பொருட்கள் வாங்கப்பட்டுள்ளது மற்றும் சிறுவாணி மெயின் இணைப்பில் பழுது ஏற்பட்டுள்ளதனை கருத்தில் கொண்டு குடிநீர் அவசர அவசியத்தை முன்னிட்டு பழுது பார்த்தல் பணி நடைபெற்றது. மேற்படி பணி செய்து முடித்தமைக்கு மேற்படி காசோலைகள் மூலம் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. இதில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை. மேற்படி செலவினங்களுக்கு கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் மேலொப்பம் பெற்று தொகை வழங்கப்பட்டுள்ளதாலும், இச்செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதாலும், 01.04.2023 முதல் 31.03.2024 வரை)

செயல் அலுவலர் திருமதி. இரா. சுதா பணியாற்றிய காலங்களுக்கு தணிக்கை முடிவுற்றதற்கு மறு தணிக்கை தேவையில்லை எனவும் மற்றும் செயல் அலுவலர் திருமதி. இரா. விஜயபானு பணியாற்றிய காலத்திற்கு தணிக்கை துவங்கப்படவில்லை என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மனுதாரர் 12.04.2025 (கிடைக்கப்பெற்ற தேதி 10.06.2025), 17.07.2025 மற்றும் 08.08.2025 (கிடைக்கப்பெற்ற தேதி 18.08.2025) ஆகிய தேதிகளில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரியுள்ள ஆவணங்கள் யாவும் தகவல்களாக இப்பேரூராட்சி அலுவலக ந.க.எண். 107/2025 நாள் 08.07.2025, ந.க. எண்.142/2025 நாள் 29.07.2025 மற்றும் 17.09.2025ன்படி மனுதாரருக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

<u>மனுதாரரின் கோரிக்கை எண். 02</u>

செய்யாத சாக்கடை கால்வாய் பணி செய்தது போல மற்றும் செய்த சாக்கடை கால்வாய் பணி தரமற்ற முறையில் அமைத்துள்ளார் ஆனால் ஆய்வு செய்யவில்லை.

<u>பொது தகவல் அலுவலரால் வழங்கப்படும் பதிலறிக்கை</u>

கோயம்புத்தூர் மாவட்டம், வேடபட்டி பேரூராட்சிக்கு பல்வேறு திட்டங்கள் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளுக்கு முறையாக உரிய மேல் அலுவலர்களிடம் (பேரூராட்சிகளின் இயக்குநர்/பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்/மாவட்ட ஆட்சித்தலைவர்) நிருவாக அனுமதி பெறப்பட்டு, பொறியாளர்களிடம் (கண்காணிப்பு பொறியாளர்/உதவி செயற் பொறியாளர்) தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு முறையாக டெண்டர் விடப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கி பணிகள் செய்யப்பட்டு வருகிறது. மேலும் பணி முடிவுற்றவுடன் மூன்றாம் நிலை ஆய்வறிக்கை பெறப்பட்டு தரம் உறுதி செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. மேலும் சாக்கடை பணிகளும் மேற்கண்ட முறையிலேயே நடைபெற்று வருகிறது என்ற விவரம் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

<u>மனுதாரரின் கோரிக்கை எண். 03</u>

பேரூராட்சி மன்ற கூட்டம் நடக்காததை நடந்தது போல வராத உறுப்பினர்களை வந்தது போல போலி நபர்கள் மூலம் கையெழுத்து பெற்று கூட்டம் நடைபெற்றதற்கு என்று செலவு செய்தது போல கவுன்சிலரின் இல்லங்களுக்கு சென்று கையெழுத்து பெறுவது கூட்டத்தில் கலந்து கொள்ளாத வராத கவுன்சிலர்களிடம்.

<u>பொது தகவல் அலுவலரால் வழங்கப்படும் பதிலறிக்கை</u>

கோயம்புத்தூர் மாவட்ட வேடபட்டி பேரூராட்சிக்கு வரப்பெற்ற புகார் மனுவிற்கிணங்க, பேரூராட்சி மன்ற கூட்டத்திற்கான கூட்ட பொருட்கள் அனைத்து வார்டு உறுப்பினர்களுக்கும் சார்வு செய்து அஜந்தா பதிவேட்டில் கையொப்பம் பெறப்பட்டு மாதம் ஒருமுறை மன்ற கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், கூட்டம் நடைபெறும்போது வருகை பதிவேட்டில் கையொப்பம் பெறப்பட்டு கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை என்ற விவரம் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

<u>மனுதாரரின் கோரிக்கை எண். 04</u>

வழக்கறிஞர்களுக்கு என்று பீஸ் கொடுத்ததாக பல வழக்குகளுக்காக என்று 05.04.2024 முதல் 20.04.2024 வரை இலட்சத்தை தொடும் அளவிற்கு குறிப்பேடுகளை கண்டேன் கள

ஆய்வின் போது பல வகைகளில் ஊழல் செய்து பலனடைந்துள்ளார். பராமரிப்பு செய்யாத பணிக்கு போலியான பில்களை உருவாக்கி இவ்வாறு பல வகைகளில் மேற்கூறிய செயல் அலுவலர் அவர்கள் முறைகேடு செய்துள்ளார்.

பொது தகவல் அலுவலரால் வழங்கப்படும் பதிலறிக்கை

கோயம்புத்தூர் மாவட்டம், வேடபட்டி பேரூராட்சியில் கடந்த 2019-2020ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் எல்இடி விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ.61.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் அடிப்படையில் முறைப்படி டெண்டர் விடப்பட்டு எல்இடி விளக்குகள் அமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டது. மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டமைக்கு ஒப்பந்ததாரருக்கு தொகை விடுவிக்கும் பொருட்டு டுபிட்கோ நிறுவனத்திற்கு தொகை விடுவிக்கும் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டதன் அடிப்படையில், மேற்படி டுபிட்கோ நிறுவனத்தில் தொகை விடுவிப்பதற்கு போதிய நிதியிருப்பு இல்லை எனவும், மேற்படி ஒப்பந்ததாரருக்கு பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து தொகை விடுவிக்குமாறு தெரிவித்து கடிதம் வரப்பெற்றது. இப்பொருள் தொடர்பாக மேற்படி ஒப்பந்ததாரர் ( RVG Metal Industries) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (வழக்கு எண்கள் WP No/ 9054/2024 மற்றும் 19822/2024) தொடரப்பட்டதன் அடிப்படையில், மேற்படி வழக்கிற்கு பேரூராட்சி சார்பாக ஆஜராகும் பொருட்டு அரசு வழக்கறிஞருக்கு 18.04.2024 மற்றும் 12.04.2024ன்படி வழக்கு கட்டணமாக தொகை ரூ.50,000/- மட்டும் வழங்கப்பட்டுள்ளது. (காசோலை எண். 838541/08.04.2024 - ரூ.25,000/- மற்றும் காசோலை எண். 838549, நாள் 12.04.2024 ரூ.25,000/- மொத்தம் ரூ.50,000/-) இதில் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை. அரசு வழக்கறிஞர் அவர்களால் வழங்கப்பட்ட கேட்பு தொகையின் அடிப்படையிலேயே RTG மூலமாக வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் விடுவிக்கப்பட்டுள்ளது. இச்செலவினத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது. மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை என்ற விவரம் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரரின் கோரிக்கை எண். 05

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் அவரது சொத்து விவரங்களை பற்றி தகவல்களை கோரினால் 8(1) ஜேயின் அடிப்படையில் தகவல்கள் மறுக்கப்படுகிறது இதிலிருந்து வேடபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் தில்லுமுல்லுகள் வெளிப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் பொய்யான தகவல்களை வழங்குகிறார். பொய்யாகக் கணக்குகளை சமர்ப்பித்து ஊழல் முறைகேடுகளில் திளைத்துள்ளார்.

பொது தகவல் அலுவலரால் வழங்கப்படும் பதிலறிக்கை

மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள செயல் அலுவலர் திருமதி. இரா. விஜயபானு என்பவரது சொத்து விவரங்கள் அடங்கிய தகவல்கள் இப்பேரூராட்சியில் பராமரிக்கப்படுவதில்லை. தனியரின் பணிப்பதிவேடானது கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருவதால் மேற்படி விவரங்கள் வழங்க இயலவில்லை என்ற விவரம் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரரின் கோரிக்கை எண். 06

வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்களை வாங்கி குவித்துள்ளார். அவரின் வாரிசுதாரர்களின் பெயரில் உட்பட சொத்துக்களை குவித்துள்ளார்.

பொது தகவல் அலுவலரால் வழங்கப்படும் பதிலறிக்கை

மனுதாரரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள செயல் அலுவலர் திருமதி. இரா. விஜயபானு என்பவரது சொத்து விவரங்கள் அடங்கிய தகவல்கள் இப்பேரூரராட்சியில் பராமரிக்கப்படுவதில்லை என்பதால் மேற்படி மனுதாரர் கோரிய விவரங்கள் வழங்க இயலவில்லை என்ற விவரம் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரரின் கோரிக்கை எண். 07

வேடபட்டி பேரூராட்சியில் உள்ள எப்.சி. காலனி பகுதியில் உருவாக்கப்பட்ட மேல்நிலை குடிநீர் தொட்டி தரம் இல்லாமலும் அதிக அளவு முறைகேடும் செய்துள்ளார். இந்த தொட்டியானது அமைக்கப்பட்டு இன்றுடன் மூன்று ஆண்டுகள் நெருங்கப் போகிறது. ஆனால் தண்ணீர் ஏற்றினால் நீர்க்கசிவு ஏற்படுகிறது. பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இன்னும் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை.

பொது தகவல் அலுவலரால் வழங்கப்படும் பதிலறிக்கை

கோயம்புத்தூர் மாவட்டம், வேடபட்டி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 04 எப்சிஐ காலனி பகுதியில் கடந்த 2023-24ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியின் கீழ் மேல்நிலை தொட்டி கட்டப்பட்டுள்ளது. மேற்படி மேல்நிலைத் தொட்டி பொறியாளரால் கண்காணிக்கப்பட்டு மேலளவுகள் (Measurement) செய்யப்பட்டு கட்டப்பட்டுள்ளது. இதில் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை. மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை என்ற விவரம் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

மனுதாரரின் கோரிக்கை எண். 08

கட்டிட வரைமுறைக்கும் லே அவுட் அமைப்பதற்கு அமைத்ததற்கு டிடிசிபி விதிகளின் முறையை மதிக்காமல் ஆய்வு செய்யாமல் பூங்காக்கு என்ற இடம் ஒதுக்காமல் ரிசர்வு சைட் ஏற்படுத்தாமல் தனது சுயலாபத்திற்காக பணத்தின் பலனை பெற்று அதிகாரி துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார்.

பொது தகவல் அலுவலரால் வழங்கப்படும் பதிலறிக்கை

கோயம்புத்தூர் மாவட்டம், வேடபட்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட வரைமுறை மற்றும் லே அவுட் அமைப்பதற்கும் அனுமதி கோரி வரப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் ஒற்றை சாளர முறையில் (Single Window Portal) இணைய வழியில் பெறப்படுகிறது. இணைய வழியில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்து நேரடியாக கள ஆய்வு செய்யப்பட்டு ஆவணங்கள் மற்றும் வரைபடங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

இந்நேர்வில், கட்டிட வரைபட அனுமதி கோரி வரப்பெறும் விண்ணப்பங்களுக்கு பொது ஒதுக்கீடு எதுவும் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டியதில்லை. மேலும், புதிதாக லே அவுட் அமைக்கும்பொருட்டு விண்ணப்பங்கள் கோவை உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்படும். TNCDBR 2019 விதிகளின்படி மனுதாரர் பொது ஒதுக்கீட்டு இடமாக (OSR Land) பேரூராட்சிக்கு ஒப்படைக்கலாம் அல்லது பொது திறவையிடத்திற்கான கட்டணங்களை (OSRA FEE) செலுத்தலாம். மேலும், மனைப்பிரிவு அனுமதியினை பொறுத்தமட்டில் மேற்படி விதிகளின்படி மனுதாரரிடமிருந்து பொது ஒதுக்கீட்டு இடமானது (OSR LAND) பேரூராட்சி செயல் அலுவலர் பெயரில் தானக்கிரையம் மூலம் பெறப்படுகிறது. அல்லது பொது திறவையிடத்திற்கான கட்டணங்கள் (OSRA FEE) கோவை உள்ளூர் திட்டக் குழுமம் மூலம் வசூலிக்கப்பட்டு,

தொழில்நுட்ப அனுமதி மற்றும் மனைப்பிரிவு வரைபட அனுமதி உள்ளூர் திட்டக் குழுமம் மூலம் வழங்கப்பட்டு இறுதி ஒப்புதலுக்காக பேரூராட்சிக்கு மனுதாரரின் விண்ணப்பமானது இணைய வழியில் அனுப்பப்படுகிறது என்ற விவரம் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

<u>மனுதாரரின் கோரிக்கை எண். 09</u>

தமிழக அரசு அறிவித்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை பெயரளவுக்கு வைத்துக்கொண்டு தூய்மை பணியாளர்கள் குப்பைகளை ஆங்காங்கே குவியல்களாக குவித்து நெருப்பு மூட்டி விடுகிறார்கள். குப்பைகளை தரம் பிரிக்காமல் பிளாஸ்டிக் பொருட்கள் அனைத்துமே எரிக்கின்றார்கள். திடக்கழிவு மேலாண்மை திட்டம் என்ற ஒன்று செயல்படாமல் செய்துவிட்டார்.

<u>பொது தகவல் அலுவலரால் வழங்கப்படும் பதிலறிக்கை</u>

கோயம்புத்தூர் மாவட்டம், வேடபட்டி பேரூராட்சியில் தமிழக அரசு அறிவித்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்ந்து நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தூய்மை பணியாளர்களால் தள்ளு வண்டிகள் மூலம் வீடு வீடாக சென்று மக்கும் குப்பை (ம) மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கப்பட்டு உரக்கிடங்கிற்கு கொண்டு சென்று மக்கும் குப்பைகளை உரம் தயாரிப்பதற்கும் மக்காத பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் கண்ணாடி பாட்டில்கள் போன்ற பொருட்கள் தரம் பிரிக்கப்பட்டு விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகள் எதுவும் நெருப்பு மூட்டப்படுவதில்லை. மனுதாரர் புகார் மனுவில் தெரிவித்துள்ள நிகழ்வுகள் எதுவும் நடைபெறவில்லை என்ற விவரம் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

<u>மனுதாரரின் கோரிக்கை எண். 10</u>

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் வேடபட்டி பேரூராட்சி சம்பந்தமான தகவல்களை கேட்டால் ஆர்டிஐ சட்ட விதி 4(1) பி அடிப்படையில் வழங்காமல் 8(1) ஜெ அடிப்படையில் தகவல்களை வழங்காமல் மறுத்தார். வேடபட்டி பேரூராட்சியில் ராணுவ ரகசியங்களையும் அணுகுண்டு தயாரிக்கும் முறைகளையோ இந்திய இறையாண்மைக்கு எதிரான தகவல்களையோ நான் கேட்கவில்லை. ஆனால் திருமதி. விஜய பானு செயல் அலுவலர் அவர்கள் RTI விதியை முற்றிலுமாக அவமதிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டார். ஆகவே இந்த செயல் அலுவலரின் மீது தமிழ்நாடு அரசு பணியாளர்கள் ஒழுங்கு நடவடிக்கை விதிகளின்படி 17(பி)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

<u>பொது தகவல் அலுவலரால் வழங்கப்படும் பதிலறிக்கை</u>

மனுதாரர் 12.04.2025 (கிடைக்கப்பெற்ற தேதி 10.06.2025), 07.07.2025 மற்றும் 08.08.2025 (கிடைக்கப்பெற்ற தேதி 18.08.2025) ஆகிய தேதிகளில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரியுள்ள ஆவணங்கள் யாவும் தகவல்களாக இப்பேரூராட்சி அலுவலக ந.க.எண். 107/2025, நாள் 08.07.2025, ந.க.எண். 142/2025 நாள் 29.07.2025 மற்றும் 17.09.2025ன்படி மனுதாரருக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ தீர்ப்பாயத்திற்கு பணிந்து தெரிவிக்கப்படுகிறது. (மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தகவல்கள் நகல் மற்றும் மனுதாரர் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதல் அட்டையின் நகலையும் இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது). மேலும் மேற்படி செயல் அலுவலர் RTI விதியை அவமதிக்கும் நோக்கத்துடன் செயல்படவில்லை என்பதால் ஒழுங்கு நடவடிக்கை விதிகளின்படி 17(பி)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தேவையில்லை என்று மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் தீர்ப்பாயத்திற்கு பணிந்து தெரிவிக்கப்படுகிறது.

4. மனுதாரர் திரு. சு. பிரகாஷ் மற்றும் எதிர்மனுதாரரான வேடபட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 08.04.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.03.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. சு. பிரகாஷ் என்பவர் தனது 07.04.2026 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் அனுப்பிய மனுவில் தனது தாயாரின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தன்னால் 08.04.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு வர இயலாது எனவும் பிறிதொரு நாளில் விசாரணை மேற்கொள்ளுமாறு வேண்டி கேட்டுக்கொண்டுள்ளார். எனவே 08.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை.

6. எதிர்மனுதாரரான வேடபட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 08.04.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

01.04.2023 முதல் 31.03.2025 வரை வேடபட்டி பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக மனுதாரர் தனது 14.01.2026 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு எனது விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறேன்.

<u>1. எழுதுபொருட்கள் குடிநீர் குழாய் பழுது பார்த்ததில் செலவினம் தொடர்பாக:-</u>

அவசர மற்றும் அவசியம் கருதி அலுவலக தேவைக்காக எழுதுபொருட்கள் வாங்கப்பட்டன.

சிறுவாணி மெயின் இணைப்பில் பழுது ஏற்பட்டதன் காரணமாகவும், அத்தியாவசிய தேவையான குடிநீரை பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது. இச்செலவினங்களுக்கு கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் மேலொப்பம் பெறப்பட்டு பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் காசோலைகள் மூலம் வழங்கப்பட்டது.

<u>2. சாக்கடை கால்வாய் பணி மேற்கொண்டது தொடர்பாக</u>

பேரூராட்சி பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதி பெற்று, பொறியாளரிடம் தொழில்நுட்ப அனுமதியும் பெற்று, உரிய ஒப்பந்தப்புள்ளி மூலம் பணி உத்தரவு வழங்கப்படுகிறது. பணிகள் முடிவுற்றதும் மூன்றாம் நிலை ஆய்வறிக்கையும் பெற்று பணியின் தரத்தை உறுதி செய்யப்படுகிறது.

<u>3. பேரூராட்சி மன்ற கூட்டம் நடத்தப்பட்டது தொடர்பாக</u>

மாதம் ஒரு முறை நடத்தப்படும் பேரூராட்சி மன்ற கூட்டத்தின் கூட்ட பொருட்கள் அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கும் சார்வு செய்து, அஜந்தா பதிவேட்டில் உறுப்பினர்களின் கையொப்பம் பெறப்பட்டு மற்றும் கூட்டம் நடைபெறும்போது வருகை பதிவேட்டிலும் கையொப்பம் பெறப்பட்டு வருவதால் மனுதாரர் தெரிவித்துள்ளதுபோல எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை.

<u>4. வழக்கறிஞர் கட்டணம் ஒப்பளிப்பு செய்தது தொடர்பாக</u>

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு எண். W.P. No. 9054/ 2024 மற்றும் 19822/2024 ஆகிய வழக்குகளுக்கு பேரூராட்சி சார்பாக ஆஜரான பேரூராட்சி அரசு வழக்கறிஞருக்கு கட்டணமாக 08.04.2024 மற்றும் 12.04.2024 அன்று மொத்தம் ரூ.50,000 மட்டுமே வழங்கப்பட்டது.

இச்செலவினத்திற்கு பேரூராட்சி மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது. மனுதாரர் தெரிவிப்பது போல் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை.

5. தகவல் பெறும் சட்டத்தின் கீழ் தகவல் அளிப்பது தொடர்பாக

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் செயல் அலுவலரின் பணி பதிவேடானது கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பராமரிப்பதால் மனுதாரர் கோரும் தகவல்கள் வழங்க இயலவில்லை.

6. பேரூராட்சி செயல் அலுவலர் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்ப்பது தொடர்பாக

பேரூராட்சி செயல் அலுவலரின் சொத்து விபரங்கள் அடங்கிய தகவல்கள் இப்பேரூராட்சியில் பராமரிக்கப்படுவதில்லை என்பதால் மனுதாரருக்கு விவரங்கள் அளிக்க இயலவில்லை.

7. மேல்நிலை குடிநீர் தொட்டி கட்டியது தொடர்பாக

வார்டு எண். 4. எப்சிஐ காலனி பகுதியில் கடந்த 2023-24ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியின் கீழ் கட்டப்பட்ட மேல்நிலை தொட்டி பொறியாளரால் கண்காணிக்கப்பட்டும், மேலளவுகள் செய்யப்பட்டும் தரத்துடன் அமையப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை.

8. கட்டட அனுமதி மற்றும் லே அவுட் அனுமதி வழங்குவது தொடர்பாக

பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டட அனுமதி மற்றும் லேஅவுட் அமைப்பதற்கான அனுமதி கோரும் விண்ணப்பங்கள் ஒற்றை சாளர முறையில் இணைய வழியில் பெறப்பட்டு, அதனை பரிசீலித்து நேரடியாக கள ஆய்வு செய்து, வரைபடங்கள் மற்றும் ஆவணங்கள் சரியாக இருக்கும்பட்சத்தில் கட்டட வரைபட அனுமதி இணையதள வாயிலாக மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

புதிதாக லேஅவுட் அமைக்கும் பொருட்டு வரப்பெறும் விண்ணப்பங்கள் உள்ளூர் திட்டக் குழுமத்தில் சமர்ப்பிக்கப்படும். மனுதாரரால் பொது ஒதுக்கீட்டு இடத்திற்கு (OSR land) ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு பதிலாக அதற்குரிய மதிப்பீட்டு தொகையினை நகர் ஊரமைப்பு இயக்குநரகத்திலேயே மனுதாரரால் தொகை செலுத்தப்பட்டு விடுகிறது. எனவே பொது ஒதுக்கீடு செய்து உத்தரவுகள் நகர் ஊரமைப்பு அலுவலகத்திலிருந்து வழங்கப்படுவதில்லை.

9. திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக

தூய்மைப் பணியாளர்கள் வீடுதோறும் சென்று குப்பைகளை மக்கும், மக்காத குப்பை என தரம் பிரித்து, மக்கும் குப்பைகளை உரக்கிடங்கிற்கு கொண்டு சென்று உரம் தயாரிப்பதற்கும், மக்காத பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் கண்ணாடி பொருட்கள்தரம் பிரித்து விற்பனையாளர்களிடம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. குப்பைகளை எந்தவொரு இடத்திலும் தீயிட்டு கொளுத்துவதில்லை. எனவே மனுதாரர் தெரிவித்து உள்ளதுபோல் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை.

10. தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் அளிப்பது தொடர்பாக

தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் மனுதாரர் 12.04.2025, 07.07.2025 மற்றும் 08.08.2025 ஆகிய நாளிட்ட மனுக்களில் கோரியிருந்த தகவல்கள் அனைத்திற்கும் உரிய தகவல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளதுபோல் வேடபட்டி பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளில் விதிமீறலோ மற்றும் முறைகேடோ நிகழவில்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரான திரு. சு. பிரகாஷ் என்பவர் தனது தாயாரின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பிரிதொரு நாளில் விசாரணை மேற்கொள்ளுமாறு கோரிய கோரிக்கையினை ஏற்று 20.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.04.2026 அன்று தேதியிட்ட அழைப்பாணை மனுதாரருக்கு

அனுப்பப்பட்டது. ஆனால் மனுதாரர் 20.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையிலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் முன் ஆஜராகவில்லை.

8. மனுதாரரின் புகார் மனு, மற்றும் எதிர்மனுதாரரான வேடபட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் தனது 14.01.2026 நாளிட்ட முறையீட்டு மனுவில் 01.04.2023 முதல் 31.03.2025 வரை பணியாற்றிய வேடபட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் பேரூராட்சியில் கீழ்க்காணும் இனங்களில் முறைகேடுகள் செய்துள்ளதாக தெரிவித்திருப்பதை அறிய வருகிறது.

1. எழுது பொருட்கள், குடிநீர் குழாய் பழுது பார்த்ததில் மேற்கொண்ட செலவினம்
2. சாக்கடை கால்வாய் பணி மேற்கொண்டது தொடர்பாக
3. பேரூராட்சி மன்ற கூட்டம் நடத்தப்பட்டது தொடர்பாக செலவினம்
4. வழக்கறிஞர் கட்டணம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது தொடர்பாக
5. பேரூராட்சி செயல் அலுவலர் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்தது தொடர்பாக
6. மேல்நிலை குடிநீர் தொட்டி கட்டப்பட்டது தொடர்பாக
7. கட்டட அனுமதி மற்றும் லே அவுட் அனுமதி தொடர்பாக
8. திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தியது தொடர்பாக
9. தகவல் பெறும் சட்டத்தின் கீழ் தகவல்கள் அளிக்கப்படாதது தொடர்பாக

மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களுக்கு முறையே பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை அறிய வருகிறது.

1. <u>எழுது பொருட்கள், குடிநீர் குழாய் பழுது பார்த்ததில் மேற்கொண்ட செலவினம் தொடர்பாக:</u>

   பேரூராட்சி அலுவலக அவசர அவசியம் கருதி எழுதுபொருட்கள் வாங்கப்பட்ட செலவினத்திற்கும் மற்றும் சிறுவாணி மெயின் இணைப்பில் ஏற்பட்ட பழுதினை சரி செய்ய மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கும் கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் மேலொப்பம் பெற்று, பேரூராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, காசோலைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.
2. <u>சாக்கடை கால்வாய் பணி மேற்கொண்டது தொடர்பாக</u>

   திட்டப்பணிகள் மேற்கொள்ளும் நேர்வுகளில் பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக அனுமதியுடன், ஒப்பந்தப்புள்ளி மூலம் பணி ஆணை வழங்கி, முடிவுற்ற பணிகளுக்கு தரம் உறுதி செய்திட மூன்றாம் தரப்பு ஆய்வறிக்கையும் பெறப்படுகிறது.
3. <u>பேரூராட்சி மன்ற கூட்டம் நடத்தப்பட்டது தொடர்பாக</u>

   பேரூராட்சி மன்றத்தில் ஒவ்வொரு மாதமும் நடைபெறும் கூட்டத்தின் கூட்ட பொருட்கள் அனைத்து மன்ற உறுப்பினர்களுக்கும் சார்வு செய்து, அஜந்தா பதிவேட்டில் உறுப்பினர்களின் கையொப்பம் பெறப்பட்டு, கூட்டம் நடைபெறும் போது வருகைப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது.
4. <u>வழக்கறிஞர் கட்டணம் ஒப்பளிப்பு தொடர்பாக</u>

   மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட 2 வழக்குகளுக்கு (W.P. No.9054/2024 மற்றும் W.P.19822/2024) பேரூராட்சி சார்பாக ஆஜரான வழக்கறிஞர்களுக்கு தலா ரூ.25,000 வீதம் மொத்தம் ரூ.50,000 மட்டுமே செலவினம் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான மன்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

5. <u>பேரூராட்சி செயல் அலுவலர் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்ப்பது தொடர்பாக</u>

   பேரூராட்சி செயல் அலுவலரின் சொத்து விவரங்கள் அடங்கிய தகவல்கள் இப்பேரூராட்சியில் பராமரிக்கப்படுவதில்லை.

6. <u>மேல்நிலை குடிநீர் தொட்டி கட்டப்பட்டது தொடர்பாக</u>

   2023-24ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியின் கீழ் வார்டு எண். 4, எப்சிஐ காலனியில் கட்டப்பட்ட மேல்நிலை தொட்டி பொறியாளரால் கண்காணிக்கப்பட்டும், மேலளவுகள் செய்யப்பட்டும் தரத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

7. <u>கட்டட அனுமதி மற்றும் லே அவுட் அனுமதி வழங்குவது தொடர்பாக</u>

   பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டட அனுமதி மற்றும் லே அவுட் அமைப்பதற்கான வரைபட அனுமதிக்கு உரிய விண்ணப்பங்கள் ஒற்றை சாரள முறையில் இணைய வழியில் பெற்று, உரிய விதிகளின் கீழ் ஆய்வு செய்து, ஆவணங்கள் சரியாக இருக்கும் நேர்வுகளுக்கு கட்டட வரைபட அனுமதி இணையதள மூலம் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

8. <u>திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக</u>

   பேரூராட்சிக்குட்பட்ட வீடுகளிலிருந்து சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை உரம் தயாரிக்க, உரக் கிடங்கிற்கு அனுப்பப்பட்டும், மக்காத குப்பைகளை விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்தும் வருவதால் எவ்விதத்திலும் குப்பைகளை தீயிட்டு எரிக்கப்படுவதில்லை.

9. <u>தகவல் பெறும் சட்டத்தின் கீழ் தகவல்கள் அளிக்கப்படாதது தொடர்பாக</u>

தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் மனுதாரர் கோரப்பட்ட தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன. மனுதாரர் கோரும் தகவல்கள் பேரூராட்சியால் கையாளப்படவில்லையெனில் அதனை தெரிவித்து, மனுதாரருக்கு உரிய தகவலும் வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தனது 14.01.2026 நாளிட்ட முறையீட்டு மனுவில் வேடபட்டி முதல்நிலை பேரூராட்சியில் 9 இனங்களில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என தெரிவித்துள்ளார்.

இவற்றில்,

1. எழுதுப் பொருட்கள், குடிநீர் குழாய் பழுது பார்த்ததில் மேற்கொண்ட செலவினம்
2. சாக்கடை கால்வாய் பணி மேற்கொண்டது தொடர்பான செலவினம்
3. பேரூராட்சி மன்ற கூட்டம் நடத்தப்பட்டது தொடர்பான செலவினம்
4. வழக்கறிஞர் கட்டணம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது
5. மேல்நிலை குடிநீர் தொட்டி கட்டப்பட்டது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவினம்
6. திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தியது தொடர்பான செலவினம்

ஆகிய 6 இனங்களில் பேரூராட்சியால் மேற்கொண்ட செலவினங்களில் எவ்வித நிதியிழப்பும் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்திடும் வகையில் உள்ளாட்சி நிதி சிறப்பு தணிக்கைக் குழு மூலம் தணிக்கை செய்து அதன் அறிக்கையை 3 மாத காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும்,

(1) கட்டட அனுமதி மற்றும் லே அவுட் அனுமதி ஆய்வு செய்யாமல் வழங்கியது தொடர்பாக,
(2) பேரூராட்சி செயல் அலுவலர் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்தது ஆகிய இனங்கள் குறித்து பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் மூலம் ஆய்வு செய்து, அவரின் அறிக்கையை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்யலாம் எனவும் இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுதாரர் கோரும் தகவல்கள் பேரூராட்சியால் வழங்கப்படுவதில்லை என்கிற புகார் குறித்து, உரிய அமைப்பை நாடி நிவாரணம் பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 06–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
1. திரு. சு. பிரகாஷ்,
எண். 3/H9, பவானி வீதி, ஸ்ரீராம் கார்டன் பகுதி 1, வேடபட்டி
கோயம்புத்தூர் மாவட்டம் - 641 007.
2. செயல் அலுவலர்,
வேடபட்டி முதல்நிலை பேரூராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.
3. இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, 571, அண்ணாசாலை,
நந்தனம், சென்னை-35.
4. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை–600 028.
5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer), (பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர்,சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032